DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 1/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.12

Accused A1, A2 present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சுப்பாரெட்டியார் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 14th day of August, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 1ம் எதிரி முத்து மற்றும் தியாகராஜன் ஆகியோர்களை தெரியும். 1ம் எதிரி முத்து அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளராக பணியாற்றினார். 2ம் எதிரி தியாகராஜன் அருப்புக்கோட்டை நகராட்சியில் கணக்கராக பணியாற்றினார்.எனக்கு புகார்தாரர் சோமசுந்தரம் அவர்களை தெரியும். நான் அரசு ஒப்பந்ததாரராக தொழில் செய்து வருகிறேன். எனக்கு வரும் ஒப்பந்த பணிகளை டெண்டர் மூலம் எடுத்து எனது வேலைகளை என்னைச் சார்ந்தவர்களுக்கு பிரித்து கொடுப்பது வழக்கம்.

அருப்புக்கோட்டை நகராட்சியில் டெண்டர் மூலம் ரூ. 75 லட்சம் மதிப்பில் அருப்புக்கோட்டை மயான சாலையில் பேவர் பிளாக் அமைக்கும் ஒப்பந்தப்பணியை எனது பெயரில் நான் எடுத்து அந்த வேலையை புகார்தாரர் சோமசுந்தரம் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக நான் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு நான் செல்வது வழக்கம்.

எனக்கு ஒப்பந்த பணிக்கான டெண்டர் தொகை ரூ. 75 லட்சத்தில் 5 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை வரவேண்டியிருந்தது. மற்ற ஒப்பந்த பணிக்கான தொகையை நான் காசோலையாக பெற்றுக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ 16 ல் நான் பிடித்தம் செய்யப்பட்ட 5 சதவீத தொகையை அருப்புக்கோட்டை நகராட்சியில் இருந்து பெறுவதற்காக கடிதம் கொடுத்துள்ளேன். அந்த கடிதத்தில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் அசாஆ 22** ஆகும். நகராட்சியில் இருந்து நான் பெற்றுக்கொண்ட காசோலைகளின் அடிக்கட்டைகளிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

அதை தொடர்ந்து புகார்தாரர் சோமசுந்தரம் விருதுநகர் ஊழல் தடுப்பு பிரிவில் புகார் கொடுத்து அதனை தொடர்ந்து இந்த ஒப்பந்த வேலை சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. பிடித்தம் செய்யப்பட்ட தொகை சுமார் ரூ. 3,74, 000/- புகாருக்கு பின்னர் எனக்கு வந்தது.

எதிரிகள் மீது என்ன வழக்கு என்றால் எதிரிகள் லஞ்சம் கேட்டதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக என்னை ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

நகராட்சி டெண்டர் விடப்படும்போது சப் கான்டிராக்ட் யாருக்கும் கொடுக்கக்கூடாது என்பது தான் முதல் கன்டிசன் என்றால் சரிதான். நகராட்சியில் இருந்து வரவேண்டிய தொகை அனைத்திலும் நான் தான் கையொப்பம் செய்தேன். சோமசுந்தரம் எதுவும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சோமசுந்தரம் வேலைகளை செய்வதற்கு நான் அவருக்கு அதிகாரம் அளித்து எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். கான்டிராக்ட் முடிந்து பணம் எல்லாம் எனது வங்கிக்கணக்கிற்கு தான் வரும் என்றால் சரிதான்.

விருதுநகர் ஊழல் தடுப்பு பிரிவில் சோமசுந்தரம் புகார் அளித்தபின்னர் நான்

சோமசுந்தரத்தை உன்னுடைய பிரச்சனைக்கு எனது பெயரை ஏன் பயன்படுத்திக்கொண்டாய் என்று சத்தம் போட்டேன் என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மறுவிசாரணை – இல்லை.